திருமறைநூல் நாடக வரிசை - 9

# இரட்டையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டையர்

எழுதியவர்

எஸ். என். ஜே. மரியாம்பிள்ளை

**General Editor :**
**Rev. Prof. N. M. Saveri**

நாடகப் பிரதியாக்கப் பகுதி
திருமறைக்கலாமன்றம்

அட்டைப்படம் : ரமணி
படங்கள் : சாமி
வடிவமைப்பு : கணேஸ்

ISBN 955 - 9262 - 12 - 2

**CENTRE FOR PERFORMING ARTS**

# திருமறைக் கலாமன்றம்

## திருமறைநூல் நாடக வரிசை

## இரட்டையர்

திருமறைநூல் உலகப்பொதுமை வாய்ந்தது! பல் மொழி மக்களும் படித்து இன்புறும் தகமை வாய்ந்தது! அதில் ஆய்வுக்குரியவை ஆயிரமாயிரம் இருப்பினும், ஆழமான, ஆணித்தரமான, சிந்தனைகளைத்தூண்டும் அமுத ஊற்றாகவும் அது விளங்குகிறது.

இத்தகைய தலைசிறந்த இலக்கியத்தை நாடக வரிசை நூல்களாக்கி நற்றமிழ் உலகிற்கு நல்கவேண்டும் என்ற நல்லெண்ணம் நம்முள் பல்லாண்டு துளிர்த்திருந்தது. இளைய வயதினரும், முதியவரும், கற்றவரும், மற்றவரும் நாடக உருவத்தில் திருமறைநூலையும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற அக் கனவு இப்போது நிறைவு பெறத் தொடங்கியுள்ளது.

திருமறை நூல் முழுவதையும் முதலில் இருந்து இறுதிவரை தொடர்வரிசையில் எழுதி வெளியிடும் பணியைத் திருமறைக்கலாமன்றம் பொறுப்பேற்றுள்ளது. இவ் அரும் முயற்சியினைத் தமிழ்கூறும் நல்லுலகம் தவறாது ஆதரிக்கும் என்ற திடமான நம்பிக்கை நமக்கு உண்டு.

பேராசியர் நீ.மரியசேவியர் அடிகள்

இயக்குனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

விசுவாசத்தின் தந்தை ஆபிரகாமுக்கு இரண்டு புதல்வர்கள். அவர் அடிமைப் பெண்ணான ஆகாருக்குப் பிறந்த இஸ்மாயேல் மூத்தவன் அவரது மனைவி முதிர்ந்த வயதில் பெற்றெடுத்த புதல்வன் ஈசாக் இளையவன்.

ஈசாக் இளைஞனானதும் மெசொபொத்தாமியாவிலுள்ள தனது இனத்தாள் இரபேக்காள் என்பவளை மணந்தான். நீண்ட கா்லம் பிள்ளைப் பேறின்றி இருந்த இரபேக்காள் இரு பிள்ளைகளைக் கருவுற்றாள் கா்ப்பத்திலேயே அந்த இரண்டு சகோதரா்களும்மோதிக் கொண்டார்கள். இதனால் துயருற்ற இரபேக்காள் இறைவனைப் பிரார்த்தித்தாள். மூத்தவன் இளையவனுக்குப் பணிந்திருக்கவேண்டும் என்ற இறைவனின் திட்டம் வெளிப்பட்டது.

பிங்கல நிறமும், மயிர் செறிந்த தோலுமுடையவனான எசாயு தாயின் சூலிலிருந்து முதன்முதல் வெளிப்படும் போதே, தனது அண்ணனின் காலைப்பிடித்த படி வெளிப்பட்டவன் யாக்கோப்பு.

அக்கால வழக்கப்படி உரிமைச் சொத்தில் முன்னரிமை மூத்த புதல்வனுக்கே. அதன்படி எசாயுவிற்கு உரித்தான உரிமைச் சொத்தையும், தந்தை ஈசாக்கால் அவனுக்குக் கிடைக்கவிருந்த அருளாசியையும், தாயின் ஆலோசனடியின் படி தந்திரமாகப் பெற்றுக் கொண்டான் யாக்கோப்பு.

தான் பெற்றபுதல்வர்கள் இருவரையும் அன்புசெய்ய வேண்டிய இரபேக்காள், மூத்த மகனுக்கு ஓரவஞ்சனை செய்து, இளையவனை அன்பு செய்வது உலக வழக்கியல் என்றாலும், தீமையிலிருந்து நன்மையைத் தோற்றுவிக்கும் இறைவனின் திருவுளம் இந்த வரலாற்றில் இளையோடுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி 1





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டையர்

## பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஈசாக் | – | தந்தை |
| இரபேக்காள் | – | ஈசாக்கின் மனைவி |
| நண்பன் | – | ஈசாக்கின் நண்பன் |
| எசாயு | – | ஈசாக்கின் மூத்த புதல்வன் |
| யாக்கோபு | – | ஈசாக்கின் இளைய புதல்வன் |

களம்: **ஈசாக்கின் கூடாரம்**

பாத்திரங்கள்: **ஈசாக்: இரபேக்காள்: நண்பன்**

ஈசாக்: நண்பரே! வாரும், எங்கே நீண்ட காலங்காய் தங்களைக் காண முடியவில்லையே. குறைந்தது இருபது வருடங்களாவது இருக்குமோ!

நண்பன்: ஆமாம் நான் புறப்படும் போது உமது மனைவி கர்ப்பமாய் இருந்தாள். அதன் பிறகு ஒன்றுமே தெரியாது. கூறுங்கள். . . .

ஈசாக்: என் மனைவி பேறுகாலமான போது பிங்கல நிறமும், மயிர் செறிந்த தோலும் உடைய முதல் மகனைக் பெற்றாள். மயிர் நிறம் காரணமாக அவனுக்கு எஸாயூ எனப் பெயரிட்டோம்.

நண்பன்: ஆச்சரியமாக இருக்கிறதே இவனது பிறப்பு.

ஈசாக்: இதைவிட ஆச்சரியம், இரண்டாவது குழந்தை தன் சகோதரனின் காலைப்பித்துக் கொண்டு உடனுக்குடன் வெளிப்பட்டான். இதனால் அவனுக்கு யாக்கோப் என பெயரிட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரபேக்காள்: இதை விட ஆச்சரியம் மலடியாய் இருந்த நான் ஆண்டவருடைய வல்லமையினால் கர்ப்பவதியானேன். என் வயிற்றில் கருவுற்றியிருந்து இரண்டு பிள்ளைகளும் ஒன்றோடு ஒன்று போர் புரிவதை உணர்ந்த நான் கலங்கினேன். இது நடக்குமென்றிருந்தால் நான் கருத்தாங்கியதனால் பயன் என்ன? ஆண்டவரின் திருவுள்ளத்தை அறியப்போனேன். ஆண்டவரோ "உன் வயிற்றில் இரண்டு குடிகள் உண்டு. அவ்விரண்டும் உன் வயிற்றிலிருந்து வெளிப்பட்ட நாள் முதல் வெவ்வேறாய்ப் பிரிந்து போகும். ஒரு குடியை மற்றொரு குடி மேற்கொள்ளும். மூத்தவன் இளையவனுக்குப் பணிந்தேயிருப்பான்" என்றார்.

நண்பன்: விசித்திரமாகி இருக்கிறதே. இது பற்றி பிள்ளைகளுக்குத் தெரியுமா?

இரபேக்காள்: இன்று வரை அவர்களுக்குத் தெரியாது. தெரிவந்தால் போட்டி, பொறாமை, சந்தேகம் இவற்றினாலே ஆட்பட்டு சண்டை பிடிப்பார்கள்.

நண்பன்: எங்கே பிள்ளைகளைக் காண வில்லையே.

ஈசாக்: என் அருமை மகன் எஸாயூ வேட்டையாடுவதிலும் பயிர்த்தொழில் செய்வதிலும் வல்லவன். அவன் வேட்டையாடிக் கொண்டு வரும் மிருகங்களை நான் சாப்பிட்டுக் கொண்டிருப்பதே எனது வேலை.

இரபேக்காள்: எனது செல்வ மகன் யாக்கோபுவோ கபடற்றவன், இந்தக் கூடாரங்களை விட்டுப் போக மாட்டேன்.

நண்பன்: இப்படி நீங்கள் ஒவ்வொருத்தர்மேல் அன்பு வைத்திலுப்பது சரியல்ல. இரண்டு பிள்ளைகளையும் சமமாகக் கருத வேண்டும். சரி நண்பரே நான் போய் வருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசாக்: நீண்ட காலத்துக்கு பிறகு சந்தித்திருக்கிறோம். என் பிள்ளைகளும் வந்து விடுவார்கள். கொழுத்த கன்றொன்றை அடித்து எல்லோருமாக விருந்துண்டு மகிழ்வோம். அதோ யாக்கோப் வருகின்றான். நண்பரே! நீங்கள் சென்று குளியுங்கள்.

***நண்பன் குளிக்கச் செல்லுதல் - யாக்கோப் செந்நிறமான தின்பண்டம் ஒன்றைச் சாப்பிடல் - எஸாயுகளைப்புடன் வருதல்.***

எஸாயூ: தம்பி நான் மிகவும் களைத்துவிட்டேன். காட்டில் மானை விரட்டிச் சென்று வேட்டையாடுவது என்றால் சுலபமல்ல. நீ சாப்பிடும் செந்நிற தின்பண்டத்திலே கொஞ்சம் தாரும்.

யாக்கோபு: அண்ணா! தலைச்சனுக்குரிய உனது உரிமையை எனக்கு விற்று விடுவாயா? அப்படி விற்பதாக நீ சொன்னால்தான் நான் இந்த ருசியான தின்பண்டத்தைத் தருவேன்.

எஸாயூ: எனக்கு இப்பொழுது சரியான பசி. தலைச்சனுக்குரிய உரிமைகளால் எனக்கு என்ன பயன் வரப்போகிறது. நீ சாப்பாட்டைத் தா.

யாக்கோபு: சாப்பாட்டைத் தருகின்றேன். அதற்கு முதல் நீ எனக்குச் சத்தியம் பண்ணிக் கொடு.

***எஸாயூ சத்தியம் பண்ணிக் கொடுத்தல் - பின் யாக்கோப் தின்பண்டம் கொடுத்தல்.***

***திரை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 2





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம்: ஈசாக்கின் கூடாரம்.

பாத்திரங்கள: ஈசாக்: இரபேக்காள்: எஸாயு: யாக்கோப்.

ஈசாக் முதியவனானதனால் கண்கள் கெட்டுப் பார்வை அற்றுப் போயிற்று.

ஈசாக்: எஸாயு. . . .என் மகனே.

எஸாயு: இதோ வருகிறேன் அப்பா.

ஈசாக்: மகனே! நானோ கிழவன் என் மரணம் எப்பொழுது வருமென்று அறிந்திலேன்.

எஸாயு: ஏனப்பா அப்படிக் கூறுகிறீர்கள். நீங்கள் இன்னும் பல்லாண்டு வாழுவீர்கள். கண் தெரியாத குருடர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்வதில்லையா?

ஈசாக்: மகனே என்மேல் உள்ள அன்பினால் கூறுகின்றாய். ஆயினும் நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேள்.

இரபேக்காள் மறைவிலிருந்து இதனைக் கேட்டல்.

உன் ஆயுதங்களாகிய அம்புக் கூட்டையையும், வில்லையும் எடுத்துக் கொண்டு வெளியே சென்று, வேட்டையில் அகப்பட்டதை எடுத்து, எனக்கு விருப்பமான சமையலை நீ அறிந்துள்ளபடி சமைத்து நான் உண்ணும் படியும், சாகுமுன் முழு, அன்புடன் உன்னை ஆசீர்வதிக்கவும் என்னிடம் கொண்டு வா.

எஸாயு: இதோ! இப்பொழுதே உங்கள் ஆசையை நிறைவேற்றப் போய் வருகின்றேன்.

எஸாயு அம்பு! வில்லுடன் புறப்பட்டுப் போதல்.

இரபேக்காள்: மகனே யாக்கோப். . . யாக்கோப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கோபு: என்னம்மா இவ்வளவு அவசரமாகக் கூப்பிடுகிறீர்கள். அப்பாவுக்கு எதாவது.

இரபேக்காள்: அவருக்கொன்றுமில்லை மகனே. நான் உனக்குச் சொல்லப் போவதை உடனடியாயகச் செய்ய வேண்டும்.

யாக்கோபு: சொல்லுங்கள் அம்மா.

இரபேக்காள்: நீ ஆட்டு மந்தைக்கு ஓடிப்போய் இரண்டு நல்ல வெள்ளாட்டுக் குட்டிகளைக் கொண்டு வா. நான் அவற்றை உன் தந்தை விரும்பக் கூடிய சுவையுள்ள கறிவகைகளாகச் சமைப்பேன். நீ அவற்றை அவருக்குக் கொடுப்பாய். உண்டு முடித்தபின் சாகுமுன் அவர் உன்னை ஆசீர்வதிப்பார்.

யாக்கோபு: அம்மா அண்ணன் தானே வழமையாக கறி கொடுப்பவர். அவர்தானே வேட்டையாடி மிருகங்களைக் கொண்டு வருபவர். அப்பாவும் அதைத்தானே விரும்பி உண்பார்.

இரபேக்காள்: நீ சொல்வெதல்லாம் சரி மகனே. உன் அண்ணா கறி சமைத்துக்கொண்டு வரவும் தான் சாப்பிட்டு விட்டு அவனுக்கு ஆசீர்வாதம் அளிக்கப் போவதாகவும் உன் தந்தை கூறியதை நானும் கேட்கும் படி நேர்ந்தது. அதனால்தான் அந்த ஆசீர்வாதம் உனக்கு கிடைக்கும்படி திட்டம் போட்டேன்.

யாக்கோபு: அம்மா அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவள் நீ. என் அண்ணன் எசாயூ உரோமமுள்ள உடலுடையவன் என்று அறிவீர். ஒரு வேளை என் தந்தை என்னைத் தடவிப் பார்த்துக் கண்டுபிடித்து விட்டால், நான் அவரை ஏமாற்றத் துணிந்தேனென்று நினைத்து ஆசீரையல்ல அம்மா . . . சாபத்தையே இடுவார் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரபேக்காள்:** அந்தச் சாபம் என் மேல் வரட்டும் மகனே. என் பேச்சை மட்டும் தட்டாமல் நீ போய் நான் சொல்லியவற்றைக் கொண்டு வா.

***யாக்கோப் வெளியே போதல்.***

**இரபேக்காள்:** மகனே யாக்கோபு, உன் அண்ணன் எஸாயு வலுஉள்ளவன்; எப்படியும் வாழக் கூடிய திறமை அவனுக்கிருக்கிறது. ஆனால் நீயோ கபடமற்ற பிள்ளை கூடாரங்களை விட வெளியிடங்கள் தெரியாது. உன் மேலுள்ள கூடிய பாசத்தினால் தான் உன் தந்தையின் ஆசீர்வாதம் உனக்கே கிடைக்க வேண்டுமென ஆசைப்படுகின்றேன்.

***யாக்கோபு 2 ஆட்டுக்குட்டிகளுடன் வருதல்.***

**இரபேக்காள்:** மகனே நீ சென்று நன்றாகப் குளித்துவிட்டு அழகிய ஆடைகளையும் அணிந்து வா. அதற்குள் நான் அப்பாவிற்கு வேண்டியவற்றைத் தயார்பண்ணி விடுவேன்.

**யாக்கோபு:** சரி அம்மா உங்கள் விருப்பப்படியே செய்கின்றேன்.

***திரை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 3





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம்: **ஈசாக்கின் கூடாரம்.**

பாத்திரங்கள்: **ஈசாக், யாக்கோபு; எஸாயூ; இரபேக்காள்.**

யாக்கோபு: *அப்பா!*

ஈசாக்: காது கேட்கிறது; மகனே நீ யார்?

யாக்கோபு: நான் உமது மூர்த்த மகனாகிய எசாயூதான். நீர் எனக்குக் கட்டளையிட்டபடி செய்துள்ளேன். எழுந்து உட்கார்ந்து எனது வேட்டைப் பொருளை சாப்பிடுங்கள்.

ஈசாக்: மகனே! இது உனக்கு இவ்வளவு சீக்கிரத்தில் எப்படி அகப்பட்டது.

யாக்கோபு: ஆண்டவர் அருளால் நான் விரும்பியது உடனே எனக்குக் கிடைத்தது.

ஈசாக்: மகனே! அருகில் வா. நீ என் மகன் எசாயூதானோ அல்லவோ என்று நான் உன்னைத் தடவிப் பார்த்தே உறுதி கொள்வேன்.

**ஈசாக் தடவிப் பார்த்தல் - யாக்கோபின் கைகளிலும் கழுதிலும் வெள்ளாட்டின் தோல் சுற்றி இரபேக்காள் அனுப்பியிருந்ததால் வித்தியாசம் தெரியவில்லை.**

ஈசாக்: குரல் யாக்கோபின் குரல்; கைகளோ எசாயூவின் கைகள். நீ என் மகன் எசாயூதானோ?

யாக்கோபு: நான் தான்!

ஈசாக்: நீ பிடித்த வேட்டையைச் சமைத்திருக்கிறாயே; அதைக் கொண்டு வா மகனே. அதன் பின்பே நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாக்கோபு கொடுத்த கறியை ஈசாக் சாப்பிடுதல் - திராட்சை இரசமும் குடித்தல்.**

ஈசாக்: மகனே என் கிட்ட வந்து முத்தம் செய்.

**யாக்கோபு தந்தையை முத்தமிடுதல்**

இதோ என் மகன் விடுகின்ற மணம் ஆண்டவர் ஆசீர்வதித்த விளைநிலத்தின் வாசனைபோல் இருக்கின்றதே. கடவுள் கருணை புரிந்து உனக்கு வானத்துப் பனியையும், பூமியின் செழுமையையும், மிகுந்த தானியத்தையும், திராட்சை இரசத்தையும் தந்தருள்வாராக. நாடுகள் உனக்குப் பணிபுரியவும், மக்கள் உன்னை வணங்கவும் கடவர். நீ உன் சகோதரர்களுக்குத் தலைவனாய் இரு. உன் தாயாருடைய மக்களும் உனக்கு முன் பணியக் கடவார்கள். உன்னைச் சபிப்பன சபிக்கப்பட்டனவாகவும், உன்னை ஆசீர்வதிப்பவன்ஆசிகளால் நிறைந்தவனாவும் இருக்கக் கடவான்.

**யாக்கோபு அவசரமாக வெளியேற ஏஸாயூ வரல்.**

ஏஸாயூ: அப்பா எழுந்திரு. உமது மகனுடைய வேட்டைப் பொருட்களை உண்ணுங்கள், பிறகு என்னை ஆசீர்வதியுங்கள்.

ஈசாக்: என்ன? நீ யார்?

ஏஸாயூ: நான் உம்முடைய மூத்த மகனாகிய எசாயூ.

**ஆச்சரியத்துடன்**

ஈசாக்: அப்பபடியானால் வேட்டையாடிச் சமைத்தவற்றை என்னிடம் கொண்டு வந்தவன் யார்? நீ வருமுன் அவை எல்லாவற்றையும் நான் உண்டு அவனை ஆசீர்வதித்தேன். அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவே இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸாயூ: தவறு செய்து விட்டீர்கள் தந்தையே! பார்வையில்லாத தங்களை அந்தப் பாவியவன் ஏமாற்றி, வஞ்சகம் புரிந்து தந்திரமாகத் தங்களது ஆசீரைப் பெற்றான். அப்பா. . . . அப்பா. . . என்னையும் ஆசீர்வதிக்க வேண்டும்.

ஈசாக்: உன் தம்பி கபடமாக வந்து உனக்கு உரித்தான ஆசீரைப் பெற்றுச் சென்று விட்டானே.

எஸாயூ: யாக்கோபு . . . என் தம்பி என்ற சொல்ல வெட்கமாக இருக்கிறதே. யாக்கோபு என்னும் பெயர் அவனுக்குப் பொருத்தமே ஏனென்றால் அவன் இருமுறை என்னை வஞ்சித்துள்ளான். அப்போது மூத்த மகனுக்குரிய உரிமையைப் பறித்துக் கொண்டான். இப்பொழுது எனக்குரிய ஆசீரையும் கவர்ந்து விட்டான். தந்தையே! நீர் எனக்காக ஒரு ஆசீரையும் வைத்துக் கொள்ளவில்லையா?

ஈசாக்: மகனே நான் அவனை உக்குத் தலைவனாக ஏற்படுத்தியுள்ளேன். அவன் சகோதரர் யாவரையும் அவனுக்கு அடிமைப்படுத்தியுள்ளேன் அவனைத் தானியத்தினாலும் திராட்சை இரசத்தினாலும் நிரப்பியுள்ளேன்.

எஸாயூ: அப்பா உம்மிடம் ஒரே ஒரு ஆசீர்தானா இருக்கிறது? என்னையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றேன். . . . இல்லையப்பா பிச்சை கேட்கின்றேன்.

ஈசாக்: அழாதே மகனே! உன் ஆசீர் பூமியின் செழுமையிலும், வானத்திலிருந்து பெய்யும் பனியிலும் இருக்கு. நீ உன் வாளினாலே வாழ்க்கை நடாத்தி, உன் தம்பிக்கும் பணிபுரிவாய். ஆனால் ஒரு காலம் வரும். நீ அவனுடைய அதிகாரத்தின் நுகத்தடியை உன் கழுத்தினின்று உதறித்தள்ளிவிடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஸாயூ சிறிது தள்ளி நின்று**

எஸாயூ: யாக்கோபு, என் தந்தைக்காக துக்கப்படும் நாள் வரும், அதன் பிறகு உன்னை நான் கொன்று விடுவேன். அதுவரை என் ஆசீரைப் பெற்றுக் கொண்ட நீ ஆனந்தமாக வாழு. வஞ்சகப் பேயே.

**எசாயகோபத்துடன் வெளியேறல்.**

**இரபேக்காள் யாக்கோபை அழைத்து.**

இரபேக்காள்: மகனே! யாக்கோபு உன் சகோதரன் மிகவும் கோபத்துடன் சென்றிருக்கின்றான். தனக்குக் கிடைகவேண்டிய ஆசீரை நீ பெற்றிருப்பதால் உன்னைக் கொல்லவும் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருப்பதாக அறிகிறேன்.

யாக்கோபு: அம்மா இதற்காகத் தான் நான் வேண்டா மென்று மறுத்தேன். இனி ஒன்றும் செய்ய முடியாது. அம்மா இனிமேல் நான் என்ன செய்ய வேண்டுமென்று நீங்களே கூறுங்கள்.

இரபேக்காள்: இவ்வளவு காலமும் உன்னைப் பாதுகாத்து வளர்த்து வல்லூறின் கையிலா கொடுத்து விடுவேன். கவலைப்படாதே சிறிது காலத்திற்கு ஆரான் எனும் ஊரில் எனது தமையனாகிய லாபானிடம் சென்று இரு. தக்க காலம் வரும் போது நானே உன்னை அழைக்கிறேன்.

யாக்கோபு: அம்மா.

இரபேக்காள்: மகனே! நான் ஒரே நாளில் என் இரு புதல்வர்களையும் ஏன் இழந்து போக வேண்டும். அதற்காக நீ கட்டாயம் சென்றுதான் ஆகவே வேண்டும்.

**யாக்போபு புறப்படுதல்**

**திரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு

**CENTRE FOR PERFORMING ARTS**

திருமறைக் கலாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY : SHARP GRAPHICS (PVT) LTD. COLOMBO - 12. TEL : 078 60567, 421565